Re d. No. M. 8-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-1-0

# குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 4-0-0. வெளிநாடு ரூ. 6-0-0.

மாலை 21 | ஈரோடு 11-10-1947 சனிக்கிழமை | மலர் 5.

## ஈரோட்டில் பெரியார் சொற்பொழிவு.

### "பனியா, பார்ப்பனீய ஆட்சியும், சுரண்டலும், கொடுமையும் அற்ற, யோக்கியமான சுயராஜ்யம் வேண்டும்"

★

3—9—47ல் ஈரோடு காரை வாய்க்கால் மைதானத்தில் தோழர் பி. ஷண்முக வேலாயுதம் அவர்கள் தலைமையில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் "சுதந்திரமும் தேர்தலும்" என்னும் விஷயமாய்ப் பேசியதாவது:—

"தலைவரவர்களே, தோழர்களே!

சுதந்திரமும் தேர்தலும் என்று நான் பேசப்போவது சென்ற மாதம் காங்கரஸ்காரர்களும் அவர்களது கூட்டாளிகளும் கொண்டாடிய சுதந்திர விழாவின் தத்துவத்தைப்பற்றியும், இம்மாத இறுதியில் இத்தமிழ்நாட்டில் நடக்கும் முனிசிபல் தேர்தல்பற்றியும் என்பதாகும். பெரிதும் அதைப்பற்றிய எனது கருத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் பொறுமையாய் கவனமாய் கேட்க வேண்டும் என்றுதான் வேண்டிக் கொள்ளுகிறேன். தவிரவும் அதை அப்படியே நம்பிவிடாதீர்கள் என்றும் எச்சரிக்கிறேன். என் கருத்துக்கு மாறான கருத்துக் கொண்டவர்களும் எதிர்க்கட்சியாரும் நாளை உங்களுக்குச் சொல்லுவதையும் பொறுமையாய் கவனமாய்க் கேட்டு உங்கள் சொந்த சுதந்திர பகுத்தறிவைக் கொண்டு நடுநிலைமையில் இருந்து சிந்தித்துப்பார்த்து எது சரி எது தவறு என்று முடிவு கட்டி, பிறகு ஏற்றுக்கொள்ளுங்கள்.

நாணயம்—நேர்மை

அரசியல் சம்மந்தமான, தேர்தல் சம்மந்தமான காரியங்களில் ஒருவர் ஒரு கட்சியார் பேச்சையே நம்புவது ஏமாந்த தன்மையாகும். உண்மை நாணயம் நேர்மை என்பவை அவை சம்மந்தப்படும் தொழிலுக்கும் துறைக்கும் ஏற்ற வண்ணமே ஒழிய யாவற்றிற்கும் ஒரே தன்மை உடையது அல்ல. உதாரணமாக சில தொழிலுக்கு, சில துறைகளுக்கு மெய், எப்படியும் நாணயம் நேர்மை என்பவை மற்ற துறைகளுக்கு, தொழிலுக்குக் கையாளப்படுவது போல் இருக்க வேண்டிய அவசியமில்லை, இருக்கவும் முடியாது. இருந்தால் அத்தொழிலில் வெற்றி கிடைக்காது, தொழிலும் நடக்காது. உதாரணமாக மிக்க சாமர்த்தியம் வேண்டியதான தாசித் தன்மை, வக்கீல் தன்மை, வியாபாரத் தன்மை முதலிய தொழில்களில் சுத்த சத்தியமும், நாணயமும் நேர்மையும் இருந்தால் அக்காரியம் பயனளிக்க முடியுமா? அதில் ஈடுபட்டவர்கள் வெற்றி பெற முடியுமா? அத்தொழில்களுக்குச் சுத்தமான உண்மை நாணயம், நேர்மை இருக்க முடியாது என்பது உலகம் தெரிந்திருந்தும் உலகத்தில் அத்தொழில்களில் ஈடுபட்டவர்களை இழிவாக யாராவது கருதுகிறார்களா? இழிவாய்க் கருதாத காரணம் என்ன? என்று பார்த்தால் அந்தத் துறைகளுக்கு உண்மைக் குறைவை, நாணயக் குறைவை, நேர்மைக் குறைவை உலகம் நல்ல அளவுக்கு அனுமதித்து இருக்கிறது. வக்கீலை ஜட்ஜு (நியாயாதிபதி) நம்பிவாரா? நியாயாதிபதிக்கு வக்கீல் நாணயம் தெரியும். அதாவது தன் கட்சிக்கு ஆக என்று வக்கீல் எதுவும் பேசுவார் ஆதலால் எதிர்கட்சியையும் கேட்டு இருவர் சொல்லுவதையும் நன்றாய்ச் சிந்தித்துப் பார்த்து முடிவு கூறவேண்டும் என்றுதான் நல்ல ஜட்ஜ்—அதுவும் வக்கீலாக இருந்த ஜட்ஜியே கருதுவார்—அதுபோலவே வியாபாரி சொல்லுவதை சரக்குக் கொள்முதல் செய்பவன் நம்பி விடுவானா, மற்ற இடங்களிலும் விசாரித்துப் பார்த்து நிலவரம் அறிந்தே கொள்முதல் செய்வான்; வியாபாரியே வியாபாரியை நம்ப மாட்டான், நாணயக் குறைவுக்கு ஆளான வியாபாரி தான் ஏமாந்து போனதற்கு வருத்தப்படுவானே தவிர ஏமாற்றிய வியாபாரியைக் குறை கூறமாட்டான். அதுபோலவே தாசிகள் காட்டும் காதலை அங்குச் செல்லும் அறிவாளி எவனும் தற்கால அவசியத்திற்கு

மாத்திரம் அல்லாமல் மற்றபடி உண்மை என்று நம்பிவிடமாட்டான். இத்துறைகளில் மிக மிக நாணயமற்றவர்களுக்கும் நேர்மை அற்றவர்களுக்கும்தான் வெற்றி உண்டு என்பதோடு மிகக் கெட்டிக்காரர் என்கின்ற பெயரும் உண்டு.

அதுபோலவேதான் அரசியலில் பிரவேசித்தவர்களுக்கும் நாணயம், நேர்மை என்பது ஒரு அலாதியான தன்மையதாய் இருந்து வருகிறது—இருந்து வரவேண்டியதுமாகும். அரசியலும் தேர்தலும் மக்களை ஏமாற்றத் தெரிந்தவர்களுக்குத்தான், தைரியமான பொய்யைக் கையாளுபவர்களுக்குத்தான் வெற்றியளிக்கும்-மகான்கள்கூட அரசியலிலும் தேர்தலிலும் பித்தலாட்டம், மனதறிந்த நாணயமற்ற தன்மை காட்டித்தான் ஆகவேண்டும். கடவுள்கள்கூட தனது பக்தர்களை இரட்சிக்கும், முக்தி அளிக்கும் முறையில் பல நாணயக் குறைவான கேவலமான காரியங்களைச் செய்ததாக சில மதவாதிகள் சொல்லி அதைத் தங்கள் கடவுள்களின் திருவிளையாடல்கள் என்று பெருமைகொள்ளுவார்கள். அதனாலேயே சில மதபக்தர்களிடம், மகான்களிடம் வெள்ளையான பித்தலாட்டம், சிறுமைக்குணம் காண்கிறோம். கண்டும் அவர்களை மதிக்கிறோம். ஆகையால் நான் அரசியல் தேர்தல் என்பதுபற்றி பேசுவதில் நீங்கள் என்னை ஒரு கட்சிக்காரனாக, ஒரு கட்சி வக்கீலாக மதித்து உங்களை ஒரு நீதிபதி போல் நினைத்து உண்மை காணுங்கள்.

அரசியல் கிளர்ச்சி நம் நாட்டில் ஏற்பட்டபின்பு—அதுவும் சத்தியம், நீதி, நேர்மை என்று சொல்லிக்கொண்டும், மகான்களால் கடவுள் பெயர்களை அடிக்கடி சம்மந்தப்படுத்தியும் கிளர்ச்சி செய்யப்பட்ட பிறகு நாணயக் குறைவு, பித்தலாட்டம், என்பது மிகமிக மலிந்துவிட்டது. அது எல்லாத் துறையிலும் சர்வ சாதாரணமாய்ப் புகுந்துவிட்டது. மதப்பொய்களுக்குமேலாக அரசியல் பொய்ப்பித்தலாட்டங்களுக்கு நல்ல செல்வாக்கு ஏற்பட்டு விட்டது. அந்தப்படி நடவாதவன் முட்டாள் என்றாகிவிட்டது. ஆதலால்தான் நான் சொல்லுவதை நம்பிவிடாமல் சிந்தித்துப்பார்த்து ஒரு முடிவுக்கு வந்தபின் ஏற்றுக்கொள்ளுங்கள் என்கின்றேன்.

### சுதந்திரம்

சுதந்திரம் என்பதைப்பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். "வெள்ளையன் வெளியே போய்விட்டான், நாடு நம் கைக்கு வந்துவிட்டது, புதிய யுகம் பிறந்துவிட்டது, சுயராஜ்யம் ஏற்பட்டுவிட்டது" என்பது இன்றைய அரசியல் உலகில் முழக்கப்படும் கூச்சலாகும். பாமர மக்கள் எண்ணமும் அப்படித்தான், பாமர மக்கள் மாத்திரமல்லாமல் பல படித்தவர்கள் என்பவர்களின் எண்ணமும் அப்படித்தான். இந்த முழக்கத்திற்கும், ஆர்ப்பாட்டத்திற்கும் பல பித்தலாட்ட சுயநலம் உள்ளே இருந்தாலும் அதற்கு ஏற்றபடி பலன் ஏதாவது உண்டா என்றால்,

"முன்பு போட்ட வரி வெள்ளையன் போட்டது, இப்போது போட்டவரி சுயராஜ்ய சர்க்கார் போட்டது ஆதலால் மகிழ்ச்சியோடு கொடுத்துவிடவேண்டும்"

"முன்னைய அடக்குமுறை, அடி, உதை, துப்பாக்கிப்பிரயோக சுட்டு வீழ்த்தல் வெள்ளையனால் செய்யப்பட்டவை இப்போதைய அடி, உதை, சுட்டு வீழ்த்தும்படியான அடக்குமுறை சுயராஜ்ய சர்க்கார் ஏற்படுத்தியது. ஆதலால் குறைகூறாதீர்கள்"

"முன்பு 14 அவுன்ஸ், 10 செஜம் என்பது வெள்ளையன் ஆட்சியால் ஏற்பட்டது. இப்போது 8 அவுன்ஸ், 5 செஜம் என்பது சுயராஜ்ய சர்க்காரால் ஏற்பட்டது—குறைகூறக்கூடாது"

"முன்பு நடந்த வகுப்பு மதக் கலவரம் வெள்ளையன் ஆட்சியால் ஏற்பட்டது, ஆதலால் அவன் ஒழிந்தால் தான் அவை ஒழியும், என்றோம்" இப்போது அவன் ஒழிந்தபின் அதிகமாக நடப்பதற்குக் காரணம் கேட்டால் "இன்னும் அதிகமாக நடந்தாலும் சுயராஜ்ய சர்க்கார் ஆனதால் பரவாயில்லை"

என்பதைத்தவிர வேறு பலன் ஏற்பட்டுவிட்டதாகக் காணப்படவில்லை. ஆகவே இந்த சுயராஜ்யம் "விக்டோரியா மகாராணி செத்தார், எட்வர்ட் அரசர் கையின்கீழ் ஆட்சி வந்தது. எட்வர்ட் அரசர் செத்தார், ஜார்ஜ் மன்னர் வந்தார், ஜார்ஜ் மன்னர் செத்தார் எட்வர்ட் அரசர் வந்தார், எட்வர்ட் அரசர் விட்டுவிட்டுப் போய்விட்டார், ஜார்ஜ் மன்னர் வந்தார், ஜார்ஜ் மன்னர் தாம் செய்யவேண்டிய (பார்லிமெண்ட்) அதிகாரத்தைப் பார்ப்பனர்கள் கைக்கு மாற்றினார்; அது பனியா, பார்ப்பனர் கைக்கு வந்தது" என்பதல்லாமல் இந்த சுதந்திரத்துக்கு வேறு அருத்தமோ கருத்தோ பலனோ கற்பிக்க முடியுமா? என்று அரசியல் அறிஞர்களைக் கேட்கிறேன். "இது சுதந்திரமல்ல, சுயராஜ்யமல்ல அதிகார மாற்றமேயாகும்" என்று காந்தியார் முதல் தினசரியார் வரையெல்லா தேசிய நபர்களும் பத்திரிக்கைகளும் பச்சையாக மொச்சைக்கொட்டை எழுத்தில் குறிப்பிட்டு இருக்கின்றன. இந்த அதிகாரமாற்றம்கூட ஒரு மூட்டை நெல்லைக் கொடுத்து ஒரு மூட்டை அரிசி வாங்கின "அன்னியன்-வெள்ளையன்" அட்வைசரி சர்க்கார் அதிகாரத்தை விட, ஒரு மூட்டை உமிகொடுத்து ஒரு மூட்டை அரிசி வாங்கும்படியான வன்னெஞ்சப் பச்சைப் பார்ப்பனீயக் கொடுங்கோன்மை அதிகாரமாற்றமாய்த்தான் நடந்து வருகிறதே தவிர அதிகாரம் "நம் கைக்கு" வந்ததால் நிம்மதியோ கவலையற்றதன்மையோ, அல்லது

[தொடர்ச்சி 7ம் பக்கம்]

பூந்தோட்டம். சிறந்த மாத வெளியீடு.

★ புரட்சிக் கட்டுரைகள்.
★ சீரிய சிறுகதை.
★ தொடர்கதை.
★ அழகிய முகப்பு.

தனிப்பிரதி 4 அணா.
ஆண்டுவரி ரூ 3.

விற்பனையாளர் தேவை

"பூந்தோட்டம்", சேலம்.

# ஒரு சந்தேகம்!

## கடவுள் பக்தனுக்கும்—கடவுளைப்பற்றிக் கவலைப்படாத பகுத்தறிவுவாதிக்கும் உரையாடல்.

(சித்திரபுத்திரன்)

★

கடவுள் பக்தன்:- அய்யா, அய்யா ஒரு சந்தேகம்!

பகுத்தறிவுவாதி:- என்ன அய்யா, என்ன சந்தேகம்?

க-ப:— ஒண்ணும் இல்லே, நான் கேட்கிறேன் என்பதற்காக நீங்கள் கோபித்துக்கொள்ளக்கூடாதுங்கோ.

ப-வா:—கோபம் என்னய்யா வந்தது. நீங்க சொல்லுவதைப் பார்த்தால் ஏதாவது குறும்புத்தனமாய்க் கேட்பீர்போல் தோன்றுகிறதே!

க-ப:—அப்படி ஒண்ணும் இல்லைங்கோ; உண்மையாகவே ஒரு சந்தேகம்.

ப-வா:—உண்மையாக ஒரு சந்தேகமாய் இருந்தால் கோபம் ஏன் வரும்? கேளுமே தெரிந்தால் சொல்லுகிறேன்.

க-ப:—அதுதானுங்க எனக்கு வெகு நாளாக இருந்துவரும் சந்தேகத்தைப் பற்றிக் கேட்கிறேனுங்கோ.

ப-வா:—சரி கேட்டுத் தொலையுங்களேன். கேட்கிறதற்கு முன்னாலேயே உயிரை வாங்குறீங்கோ.

க-ப:—அப்படி ஒண்ணும் சங்கடப்படாதீங்கோ ஒரே ஒரு சந்தேகமுங்கோ.

ப-வா:—சரி, சரி சொல்லித் தொலையுங்களேன்.

க-ப:—கேட்பதற்கு முன்னாலேயே இப்படி கோபித்தால் எனக்கு எப்படியோ இருக்கிறதுங்கோ.

ப-வா:—ஒண்ணும் இல்லே, கோபம் இல்லை, சங்கதி என்ன? சொல்லும்.

க-ப:—சரி சொல்லுகிறேன். ஒரு சந்தேகம் என்ன என்றால்.........சரி கேட்டே விடுகிறேன். அது வெகு நாளாய் இருந்துவருகிற சந்தேகம்தானுங்கோ, அது என்ன என்றால், அதுதானுங்கோ இந்த சாமி (கடவுள்) இருக்கிறதா இல்லையா? என்கிற சந்தேகம் தானுங்க.

ப-வா:—அட அட அட இது என்ன மகாபாதகமான காரியம் உமக்கு ஏற்பட்டுவிட்டது. எங்கேயாவது ஒரு மனிதன் சாமி இருக்கிறதா இல்லையா என்று சந்தேகப்படலாமா? இது யார் செய்கிற காரியம். மகா மகா நாஸ்திகப் பயல் செய்கிற காரியமல்லவா? இதை நீங்கள் செய்யலாமா? சாமியைப்பற்றி அதாவது கடவுளைப்பற்றி "சர்வ வல்லமையும், சர்வ ஞானமும், சர்வவியாபகமும்" உள்ள சாமியைப்பற்றி ஒரு மனிதன் அதுவும் உம்மைப்போன்ற ஒரு சாதாரண மனிதன் இருக்கிறாரா இல்லையா என்று சந்தேகப்பட்டால் இது எப்படிப்பட்ட அகம்பாவம்? சாமியைப்பற்றி நீர் சந்தேகப்படுகிறீர்! ஏனய்யா உமக்கு சாமி இருக்கிறாரா இல்லையா என்றே சந்தேகம்!! இது மகா பாதகமான காரியம் என்பது மாத்திரம் அல்லாமல் சாமியை நீர் எவ்வளவு கீழ்மைப்படுத்தி விட்டீராய்யா? உம்ம முகத்தில் விழிக்கலாமா? பூரண சுயராஜ்ய காலமாய் இருந்தால் உம்ம கதி என்ன ஆகும் தெரியுமோ? சீச்சீச்சீ இத்தனை அகம்பாவம் மனிதனுக்குக் கூடாது, கூடவே கூடாது!

க-ப:—அதுதான் அய்யா நான் கேட்கும்போதே கோபித்துக்கொள்ளக் கூடாது என்று நான் உங்களைக் கேட்டுக்கொண்டேன். நீங்களும் கோபித்துக்கொள்வதில்லை என்று சொல்லிவிட்டு இப்போது இவ்வளவு கோபம் கோபித்துக்கொள்ளுகிறீர்களே என்னமோ முழுகிப் போய்விட்டாப்லெ.

ப-வா:—அட சனியம்பிடித்த இளவே நான் ஒண்ணும் கோபித்துக்கொள்ளவில்லை. நீர் இந்தக்காரியம் இத்தனை பெரிய அக்கிரமமான காரியம் பண்ணலாமா என்று உம்ம பேரில் உள்ள பரிதாபத்தின் மீது எனக்கு ஏற்பட்ட சங்கடத்தைச் சொன்னேன்.

க-ப:—நான் என்னய்யா பெரிய அக்கிரமத்தைப் பண்ணிப் போட்டேன், அப்படி எவரும் பண்ணாத அக்கிரமத்தை. சாமி இருக்கிறதா இல்லையா? என்று கேட்டால் இது பெரிய அக்கிரமமா? யாரும் பண்ணாத மகா அக்கிரமமா? எத்தனையோ பேர் சந்தேகப்பட்டு என்னைக் கேட்டு இருக்கிறாங்கோ. எனக்குத் தெரியாததாலே—எனக்கும் சந்தேகமாய் இருக்கிறதாலெ நான் உங்களைக்கேட்டால தெரியுமே என்று கேட்டேன். நான் என்ன தெரிஞ்சு வைத்துக்கொண்டா உங்களைக் கேட்டேன்? ஆணவம் அகம்பாவம் என்று சொல்லுகிறீர். என்னமோ மகா காரியம் மூழ்கிப்போய் விட்டதுபோல் பேசுகிறீர்.

ப-வா:—மறுபடியும் என்ன ஆணவமாகப் பேசுகிறீரய்யா. இந்த மகா பாதகமான காரியத்தை நீர் செய்ததாக மாத்திரம் அல்லாமல் இன்னும் அநேகம் பேர் செய்ததாகவும் சொல்லுகிறீர். உலகம் இத்தனை கீழ்த்தரமான காரியத்துக்குப் போய்விட்டதாக நான் நினைக்கவில்லை. இந்த அக்கிரம காரியத்தை உம்மோடு மாத்திரம் நிறுத்திக்கொள்ளும் மற்றும் ஊரில் இருக்கிறவர்களையும் சேர்த்துக்சொன்னாதீர். மதஸ்தன் எவனாவது காதில் கேட்டால் உம்மை சும்மா விடமாட்டான் தெரியுமா?

க-ப:—என்னய்யா நான் அப்படி அக்கிரமம் பண்ணிப்போட்டேன். சும்மா சும்மா ஆத்திரப்படுறீங்களே, மிரட்டுறீங்களே பிரமாதமா.

ப-வா:— 'சும்மா ஆத்திரப்படறவனா?' மிரட்டுகிறேனா நானு? "என்ன அக்கிரமம் பண்ணிப்போட்டேன்" என்றா கேட்கிறீர்? என்ன அக்கிரமம் என்று சொல்லுவதற்கே வாய் கூசுதே. "சாமி இருக்கிறதா இல்லையா என்பது சந்தேகமாயிருக்கிறது" என்று சொல்லிவிட்டு "என்னா அக்கிரமம் பண்ணிவிட்டேன்?" என்கிறீரோ. இருக்கிறதோ இல்லையோ என்று நான் உமக்கு உபதேசம் பண்ணவரவில்லை. நான் அவ்வளவு மெனக்கெட்ட "மேதாவி" அல்ல. அந்த வேலைக்கும் நான் போவதில்லை. ஆனால் ஒரு மனிதன் சாமியைப்பற்றிச் சந்தேகப்படலாமா? சாமியைப்பற்றிக் கவலைப்படாமலாவது ஏதோ அவனவன் புத்தியைக் கொண்டு அவனவன் வேலையைப் பார்த்துக்கொண்டு இருக்கலாம் ஆனால் சந்தேகப்படலாமா?

கடவுளைப்பற்றிச் சொன்ன பெரியவர்கள் எல்லாம் "கடவுள் உண்டா இல்லையா என்று சந்தேகப்படுவதும் கடவுள் இல்லவே இல்லை என்று தீர்மானித்துக்கொள்ளுவதும் இரண்டும் ஒரே குற்றம்" என்றும் "இரண்டும் நாஸ்திகம் என்கின்ற தலைப்பின் கீழ்வரும்" என்றும் "கடவுளைப்பற்றிய உண்டா இல்லையா என்கின்ற விசாரணையை எவன் ஒருவன் தன் பகுத்தறிவைக் கொண்டு சிந்திக்கிறானோ அவனே பரம நாஸ்திகன்" என்றும் சொல்லித் தண்டனை விதித்து இருக்கிறார்கள். நீர் ஒரே அடியாய் கடவுளைப்பற்றிச் சந்தேகப்பட்டுவிட்டு அதுவும் அவர் இருக்கிறாரா இல்லையா என்பதிலேயே சந்தேகப்பட்டுவிட்டு அதை உமக்குள்ளாகவே வைத்திருக்காமல் இவ்வளவு தைரியமாய் துணிவாய் என்னிடம் கேட்டும் விட்டீரே. கடவுள் என்ன சாமானியப்பட்டவரா? அவரை இருக்கிறாரா இல்லையா என்று சந்தேகப்படுவதா, உம்மைப்போன்ற ஒரு சாதாரண மனுஷர்?

க-ப:—நீங்கள் பேசுவதென்ன ஒரே அடியாய் வெறும் மிரட்டலாக இருக்

[தொடர்ச்சி 5ம் பக்கம்]

குடி அரசு

11-10-47 சனிக்கிழமை

# மாணவர் காலித்தனம்.

அண்ணாமலை நகரில் கல்லூரி மாணவர்களில் ஒரு கூட்டத்தார் தங்களை காங்கரஸ் பக்தர்கள் என்று சொல்லிக்கொண்டு திராவிட கழக மாணவர்கள் இடையில் மிக்க காலித்தனமாகவும், பலாத்காரத் தன்மையாகவும் நடந்துகொண்டதாகச் சேதி வந்திருக்கிறது. திராவிடகழக மாணவர்கள் பலருக்குக் காயங்கள் காணும்படி அடி, குத்து முதலிய துன்பங்கள் ஏற்பட்டு வயித்திய சாலைக் கனுப்பப்பட்டிருப்பதாகவும் சேதி வந்திருக்கிறது.

இதைப்பற்றி இனி குறைகூறிக் கொண்டிருப்பதிலேயோ, கல்லூரி அதிகாரிகளை அல்லது சர்க்காரை வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படி கெஞ்சுவதிலோ பயன் இல்லை. இனி திராவிட மாணவர்களும் பெற்றோர்களும், திராவிடப் பொதுமக்களும் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதைப்பற்றி சிந்தனைசெய்து ஒரு முடிவுக்கு வந்தே நாமும் நம் மாணவர்களும் காப்பாற்றிக் கொள்ளப்படப் பார்க்கவேண்டும்.

காங்கரஸ் இனி தனக்கு எந்தக் கொள்கையும் இல்லாததால் நாளுக்குநாள் காலித்தனத்திலும், காலடித்தனத்திலுமே வாழ்ந்து தீரவேண்டியதான நிலைமையை எய்திவிட்டது. "காலித்தனத்துக்குப் பதில் காலித்தனம்" என்றால் அதனால் திராவிட மக்களுக்குத்தான் கேடு ஏற்படும். காங்கரசின் காலித்தனத்தால் அது வெற்றி பெற்றாலும் பலன் அடைகிறவர்கள் பனியா, பார்ப்பனர் என்னும் ஆரியக் கும்பல்களேயாகும். காங்கரஸ் தோல்வி அடைந்தாலும் பனியா, பார்ப்பன கும்பலுக்கு ஒரு நஷ்டமும் இருக்காது. ஆனால் திராவிட மக்கள், மாணவர்கள் காலித்தனத்துக்குக் காலித்தனத்தாலேயே பதில் சொல்லி தோல்வி அடைந்தாலும், வெற்றியே அடைந்தாலும் துன்பமடைகின்றவர்கள், நஷ்டமடைகின்றவர்கள் திராவிடர்களேயாகும். இந்நாட்டில் காங்கரசால் ஏற்படுத்தப்பட்ட காலித்தனமும், கொள்ளை, கொலை, குத்து, வெட்டு, நாசகாரியங்களும் ஒருநாளும் ஆரியருக்கு ஆரியர் கலகமாகவோ, ஆரியர் திராவிடர் கலகமாகவோ, காலித்தனமாகவோ, குழப்பமாகவோ ஒருபோதும் நடக்காது. காங்கரசும் ஆரியர்களும் அதில் வெகு ஜாக்கிரதையாக இருக்கிறார்கள்.

அதுபோலவே நாமும் இந்த நாட்டில் திராவிடர்களுக்கும் திராவிடர்களுக்குமே நடக்கும்படியான எப்படிப்பட்ட ஒரு சிறு கலவரத்தையும், குழப்பத்தையும் நடக்கவொட்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது திராவிட கழகத்தின் முக்கிய நோக்கமாகவும், கடமையாகவும் கொண்டு இருக்கிறோம். ஆனதால் திராவிட மாணவர்கள் இதற்கு பதில் கலகம், காலித்தனம், காலாடித்தனம் என்பதாக எண்ணாமல் ஆரியர்கள் வெட்கப்படும்படி நாம் ஒக்கட்டியில் இருந்தாலும் நமக்குள் இனி கலவரத்திற்கிடமில்லாமல் நடந்துகொள்ள வேண்டியவர்களாவோம்.

ஒரு தாய் தன் மக்கள் இருவர் அடித்துக்கொண்டால் அல்லது ஒருவனை ஒருவன் அயோக்கியத்தனமாய் அடித்துக்காயப்படுத்தினால் 'திரும்பி அடித்துக் காயப்படுத்து" என்று தன் அடிபட்ட மகனுக்கு சொல்லுவாளா? மறுபடியும் மூர்க்க மகன் அடிக்காமல் இருப்பதற்கு ஏற்ற வகைதான் செய்வாள். ஆகவால் நாம் ஒருநாளும் பதிலுக்கு பதில் காலித்தனமே என்று அதாவது "வாளுக்கு வாள்" என்றும், "போருக்குப் போர்" என்றும் யுத்தம் என்றும், "கொலைக்கு கொலை" "கொள்ளைக்கு கொள்ளை" என்றும் வடநாட்டு தென்னாட்டு ஆரியக்கும்பல் சொல்லுவதுபோல நாம் ஒருநாளும் சொல்லமாட்டோம், சொல்லவும் கூடாது. ஆனால் இனி இப்படி நடக்காமல் இருக்க இந்தத் தடவையிலாவது இதை முன் கொண்டாவது ஒரு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது திராவிடக் கழகத்தினுடையவும் திராவிட மாணவர்க் கழகத்தினுடையவும் முக்கிய—தவிர்க்க வொண்ணாத கடமையாகும்.

ஆதலால் இம்மாத இறுதிக்குள் சிதம்பரம், திருச்சி, சென்னை, ஈரோடு ஆகிய நான்கு இடங்களில் எதாவதுஒரு இடத்தில் திராவிடகழகநிர்வாகஸ்தர்களும், மாணவர் கழக நிர்வாகஸ்தர்களும் மற்றும் இரு கழக முக்கியஸ்தர்களும் ஒரு தனி மாநாடு போல் கூடி ஒரு நல்ல ஏற்பாட்டிற்கு வரவேண்டியது மிகவும் அவசியமாகும். இது பற்றித் தோழர் வேதாசலம் அவர்களிடமும், தோழர் மதியழகன் அவர்களிடமும் பேச்சு வார்த்தை அல்லது கடிதப் போக்குவரத்து அண்மையில் நடைபெறலாம் என்று கருதுகிறோம்.

கல்லூரி கல்வியை நிறுத்தி விட்ட, தற்காலம் முக்கிய அலுவல் இல்லாத (மாஜி—முன்னாள்) மாணவர்கள் சிலர் இதற்கு முழு நேரத்தொண்டு செய்யத் தேவை இருக்குமாதலால் அப்படிப்பட்டவர்கள் வசதி இருந்து இஷ்டப்பட்டால் அருள்கூர்ந்து தங்கள் முகவரியைத் தெரிவிக்கவும் வேண்டியது இதுசமயம் அவசியமாகும்.

சிதம்பரத்தில் அடிபட்டுத் துன்பமடைந்த மாணவர்களுக்கு நமது உள்ளம் முழுவதும் நிறைந்த தன்மையோடு அவர்கள் துன்பத்தில் பங்கு கொண்டு கலந்து துக்கப்படுகிறோம் என்பதை நொந்த மனத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறோம். இந்த நம் துக்கம் கண்டிப்பாய் வீண் போகாது—நல்ல பலனையே அளிக்கும். நம்மை முன்னேறச் செய்யச் சவுக் அடி கொடுத்து ஓட்டுவதற்கு இப்படிப்பட்ட சம்பவங்கள் கண்டிப்பாய்ப் பயன்படக் கூடியதாகும்.

# பார்ப்பனக்கும்பல் பாய்கிறதய்யா?

பாடுபட்டு, சண்டை செய்து, உயிர்கொடுத்து சம்பாதித்த ஜமீன்

களைப் பிடுங்கிக்கொண்டு ராஜாக்களாக, மகாராஜாக்களாக இருந்த இந்நாட்டுப்பழங்குடி மக்களாகிய ஜமீன்தாரர்களைச் சட்டம், சமதர்மம் என்ற பேரால் உதைத்துத் தள்ளி கட்டிப்போட்டு அவர்கள் ஜமீனைப்பிடுங்கிக்கொண்டு சாதாரண மக்களாக ஆக்கலாமாம்.

ஆனால்,

பாடுபடாத சோம்பேறிக் கூட்டமாக வாழ்ந்த பார்ப்பனர், ஒரு தாசி எப்படித் தனது தாசித்தொழிலில் காதல்காட்டிக் காமாந்தகாரனிடம் சொத்துக்களை எழுதி வாங்கி அனுபவிக்கிறாளோ அது போல் ஏமாந்த சோணகிரி முண்டங்களான இஸ்பெட் ராஜாக்கள் பிரபுக்கள் ஆகியவர்களை மதக்கள் அருந்தச்செய்து வெறியேற்றி அந்த சமயத்தில் இனாம்—பிச்சை என்று எழுதி வாங்கிக்கொண்டு சோம்பேறி வாழ்க்கை நடத்தும் வெளிநாட்டிலிருந்து இந்த நாட்டுக்குக் குடி வந்து புகுந்த பார்ப்பனர்களின் இனாமை பொதுமக்களுக்கு, ஏழைகளுக்கு படிப்பு, சுகாதாரம் முதலிய காரியங்களுக்குப் பயன்படுத்த அதே சட்டம் சமதர்மம் என்ற தலைப்பில் ஜனப்பிரதிநிதிகள் என்பவர்களான சட்டசபை அங்கத்தினர்கள் மெஜாரிட்டியாகக் கேட்டால் அது இந்தப் பார்ப்பனர்களுக்கு நாஸ்திகம், பாபம், சுயமரியாதைக் கூட்டத்தார் நடத்தை என்று ஆகிவிடுவது மாத்திரமல்லாமல் எதிர்க்கக் கச்சைகட்டுவதாகவும் கூறி சபதம் செய்கிறார்கள் நம் பிராமணோத்தமர்கள் (ஆரியர்கள்). இதுவரை 3-சட்டசபைப் பிராமணர்கள் வெளிப்படையாய் எதிர்த்துக் கச்சை கட்டியிருக்கிறார்கள். அவர்கள் யார் என்றால்,

1. வாமனாவதார வைத்தியநாதய்யர். இவர் இந்தக்காரணத்துக்கு ஆகவே சட்டசபையில் இருந்து ராஜிநாமாக் கொடுத்துவிட்டார். இனி எதிர்ப்பு வேலையில் இறங்கப்போகிறார்.

2. பழைய ஊசிப்போன மாஜி மந்திரி பாஷ்யம் ஐயங்கார் இவர் "இந்த எதிர்ப்பு வேலையில் இறங்கி விட்டேன்" என்று சங்கநாதம் செய்கிறார்.

3. குட்டிப்பார்ப்பனர் ஒருவர தாச்சாரியார் அவர்கள் "கொஞ்ச ஓட்டில் ஜெயித்த தீர்மானம் ஜனநாயகமாகாது, ஆதலால் அது செல்லாது" என்பதாகப் பத்துவா (வேத வாக்கு) கொடுத்து விட்டார்.

இனியும் ஈசல்கள் போல் பார்ப்பனர்கள் இதை எதிர்க்கப் புறப்படுவார்கள்.

இதன் பயனாகக் கடைசியாக இந்த நிறைவேறிய ஷை தீர்மானம் வாட்பீஸ் வாங்கிக் கொள்ளப்படத்தான் போகிறது என்பது நமது "ஜோசியம்."

ஏனென்றால் காங்கரஸ் பார்ப்பன ஸ்தாபனம். திராவிடர்கள் காங்கரசுக்கு நிபந்தனை அற்ற அடிமைகளே தவிர மானமுள்ள சுதந்திரர்கள் அல்ல பார்ப்பனர்களை எதிர்த்துக் கொண்டு எந்த திராவிடனும் காங்கரசிலேயே இருக்க முடியாதென்றால் மந்திரியாய் எப்படி இருக்க முடியும்? அது பார்ப்பன ஸ்தாபனமாய் இல்லாதிருந்தால் பார்ப்பன சட்டசபை அங்கத்தினர்கள் அவ்வளவு அகம்பாவமாய் பேசியிருக்க முடியுமா? யூனிவர்சிட்டி பார்ப்பனர் ஓட்டில் வந்ததால் பாஷ்யம் ஐயங்கார் அவ்வளவு தைரியமாய் பேசி இருக்கிறார். வேறு தொகுதியாயிருந்தால் அவர் மறுபடியும் வர முடியாது. அன்றியும் அவர்களுக்கு மேலிடத்துச் சலுகை இருப்பதால் எந்தக் கட்டுமீறின காரியத்தையும் அவர்கள் தைரியமாய்ச் செய்கிறார்கள். திராவிட மந்திரிகளைக் குரங்கு போல் ஆட்டுகிறார்கள்.

கிரமப்படி பார்த்தால் தீர்மானம் தோற்றவுடன் (அதாவது 66. 91 மாக எப்படி என்றால் மந்திரிகள் 10 பேர்கள் தங்களுக்கு என்று ஓட்டுப்போட்டுக்கொள்ளாமல் இருந்தால் அவர்களுக்கு 66 தான் ஆகி இருக்கும். மற்றும் இனாம் இருக்கக்கூடாது என்பதற்கு ஓட்டு 65ம் எடுக்கக் கூடாது என்பதற்கு 28மே தான் ஓட்டு நடந்திருக்கிறது.) மந்திரிகள் ராஜிநாமாச் செய்து விட்டு, அல்லது சட்டசபையைக் கலைத்து விட்டு, அல்லது குறைந்தபக்ஷமாக மெம்பர் ஸ்தானத்தையாவது ராஜிநாமாச் செய்து விட்டு மறுதேர்தலுக்கு நிற்கவேண்டும். இது

(3ம் பக்கத்தொடர்ச்சி)

கிறதே. தெரியாததைத்தானே கேட்கிறேன்.

ப-வா:—என்னையா நீர் தெரியாததைக் கேட்கிறேன் என்கிறீர்? நீர் என்னை என்ன கேட்டீர்?

க-ப:—கடவுள் இருக்கிறாரா இல்லையா என்று கேட்டேன்.

ப-வா:—அப்படியா சரி; கடவுள் என்று நீர் சொன்னீரே. எப்படிப்பட்ட கடவுள், அதற்கு என்ன கருத்து அடையாளம் கருதிக்கொண்டு சொல்லுகிறீர்; சற்று தெளிவாய்ச் சொல்லும், நீர் கேட்டது அக்கிரமமா இல்லையா என்று, அப்போது தெரிகிறது பாரும்.

க-ப:—நான் கேட்ட கடவுள் எப்படிப்பட்டது என்றால் அதுதான் நீர் முன்னால் சொன்னீரே சர்வ சக்தியும், சர்வமும் அறிந்த தன்மையும் சர்வ வியாபகமும் — அதாவது எங்கும் எல்லாப்பொருளிலும் இருப்பவரும் எல்லாக் காரியத்துக்கும் காரண பூதராக இருப்பவரும் யாவற்றையும் நடத்துகிறவருமான கடவுளைப் பற்றித்தான். அப்படிப்பட்ட ஒரு கடவுள் உண்டா இல்லையா என்றுதான் கேட்டேன்.

ப-வா:—இப்படிப்பட்ட கடவுளைப் பற்றிச் சந்தேகம் கேட்பது அக்கிரமமா இல்லையா என்று நான் உம்மைக் கேட்கும் ஒரு உதாரணத்தைக் கொண்டு தெரிந்து கொள்ளும். அதாவது நீங்கள் அண்ணன் தம்பி இரண்டு பேர் இருந்தீர்கள்; உம்ம நண்பர் ஒருவரை சில நாள் பொறுத்து நீர் காணுகிறீர். அந்த நண்பர் உம்மைப்பார்த்தவுடன் "வாப்பா ரங்கசாமி 10 நாள்களுக்குமுன்பாக உங்கள்வீட்டில் யாரோ செத்துப்போனதாகக் கேள்விப்பட்டேன் அது யார்? நீயா? அல்லது உன் தம்பி ராமசாமியா? என்பது எனக்குச் சந்தேகமாய் இருக்கிறது அந்தச்சந்தேகம் தெளியும்படி பதில் சொல்லு" என்றால் நீர் என்ன சொல்லுவீர்?

க-ப:—என்ன சொல்லுவேன். "நண்பா, எங்கள் வீட்டில் ஒருவன் செத்துப் போனது நிசம்தான், ஆனால் நான்தான் இங்கே உன்முன்னால் கல்லுப்போல் நின்று கொண்டு உன்னிடத்தில் பேசிக்கொண்டு இருக்கிறேனே நான் செத்துப்போயிருந்தால் உன்னிடம் எப்படிப்பேச முடியும்? இப்படிக் கேட்பது உன் ஆணவமா அல்லது வடிகட்டின முட்டாள்தனமா?" என்று தான் கேட்பேன்.

ப-வா:—ஏன் அப்படிக் கேட்பாய்?

---

மானமுள்ள கூட்டத்துக்கு—நாட்டுக்கு—ஜனநாயகத்துக்கு ஏற்றது; ஆனால் நம் நாட்டுக்கு!

க-ப:—ஏன்தான் கல்லுப்போல அவனெதிரில் நெட்டமாய்நின்று கொண்டும் அவனிடத்தில் பேசிக்கொண்டும் இருக்கும்போது "அண்ணைக்கு உங்கள் வீட்டில் செத்துப்போனது யார் நீயா?, ஒரு சந்தேகம்" என்றால் இது ஆணவமும் அல்லது முட்டாள்தனமும் என்பது மாத்திரம் அல்ல வடிகட்டின போக்கிரித்தனம் என்றுகூடச் சொல்லுவேன்.

ப-வா:—அப்படிக்கேட்ட உன் நண்பன் மீது நீ கண்டுபிடித்த தப்பு என்னப்பா? அவர்தான் "நீயா உன் தம்பி ராமசாமியா" என்று சந்தேகமாக இருப்பதாகச் சொன்னாரே அப்புறம் என்ன போக்கிரித்தனம் அதில் இருக்க முடியும்?

க-ப:—என்னய்யா நீங்களும் அப்படியே பேசுகிறீர். நான்தான் குட்டிச் சுவராட்டமா அவன் முன்னாலே நின்று கொண்டு [illegible] றேன். அவன் என்னை [illegible] பார்த்துக் கொண்டு என்னிடமே 'அண்ணைக்குச் செத்துப்போன நீயா' என்றால் இது சந்தேகமா? போக்கிரித்தனமல்லவா?

ப-வா:—சரி, சரி உன்ன நண்பனை ரொம்பத் திட்டாதே அப்புறம் அதெல்லாம் உனக்கே வந்து விடும்.

க-ப:—அதென்னய்யா அப்படிச் சொல்லுறீங்கோ. நான் என்ன அவனைப்போல அவ்வளவு போக்கிரித்தனமான, முட்டாள்தனமான, ஆம்பாவமான கேள்வியா உங்களைக் கேட்டுவிட்டேன்? என்னை அவனோடு சேர்த்துப் பேசுகிறீர்.

ப-வா:—உம்மை நான் அவனோடு சேர்த்துப் பேசவில்லை, நீர் அவனைவிட மோசமானவர் என்றுதான் சொல்லவேண்டும்.

க-ப:—அதென்னையா, அப்படிச் சொல்லுறீங்கோ, சந்தேகத்துக்கு விபரம் தெரிந்தால் சொல்லுங்கள் அதுவும் இஷ்டமிருந்தால் சொல்லுங்கள், இல்லாவிட்டால் போங்கள், அவன் கூடவோடு என்னை சேர்த்துப் பேசுறீங்களே இதுதான் உங்க யோக்கியதையா?

ப-வா:— கோபித்துக்கொள்ளவேண்டாம். அவசரப்படவேண்டாம். நான் சொல்லுவதை பொறுமையாய் கவனமாய்க் கேளும்.

க-ப:—சரி சொல்லுங்கோ,

ப-வா:—நீர் உமது நண்பனை அதற்காக முட்டாள் என்று கூறினீர்.

க-ப:—அவன் என்னை நேரிலேயே உருவாரம்மாதிரி வைத்துக்கொண்டு என்னோடு பேசிக்கொண்டு "அண்ணைக்குச் செத்துப்போனது நீயா உன் தம்பியா" என்னு கேட்டால் அதற்காக அவன், ஒன்னா முட்டாளா இருக்கணும், இல்லாட்டா ஆணவம்புடிச்ச அயோக்கியனாய் இருக்கணுமுன்னு சொல்லுறேன்.

ப-வா:— சரி அப்படியே வச்சிக்கொள்ளுவோம். அதாவது எதிரில் உருவமாக ஒரு ஆளை வைத்துக்கொண்டு கண்ணில் பார்த்துக்கொண்டு, கூடவும் பேசிக்கொண்டு அவனை செத்துப்போனது நீயா உன் தம்பியா" என்று கேட்டால் அதை முட்டாள்தனம், போக்கிரித்தனம், அயோக்கியத்தனம், ஆணவம் என்றெல்லாம் சொல்லிவிட்டீர்.

அதுபோலவே நேரிலே இல்லாமலும், கண்ணில் காணப்படாமலும், பேச்சு சத்தம், படும் ஸ்பரிசம்கூட இல்லாமலும், மனதிற்குக்கூட அறிந்துகொள்ள நேரடியாய் முடியாமலும் இருக்கிற நிலையில் "சர்வசக்தி, சர்வ ஞானம், சர்வ வியாபகம் உள்ள ஒரு வஸ்து அதாவது கடவுளோ, வெங்காயமோ ஒரு வஸ்து இருக்கிறதா, இல்லையா, சந்தேகமாயிருக்கிறது என்றால் இது உன் நண்பனைவிட முட்டாள்தனம், போக்கிரித்தனம், ஆணவம் என்று சொன்னால் தப்பு என்ன?

க-ப:—என்னய்யா இப்படிப் பேசுறீங்கோ.

ப-வா:—எப்படிப்பேசுகிறேன்? சர்வ சக்தி, சர்வ ஞானம், சர்வ வியாபகம் உள்ள கடவுள் என்றால் என்ன தெரியுமோ? அவரால் ஆகாதது ஒன்றுமே இல்லை, எல்லா சக்தியும் அவருக்கு உண்டு. எல்லா சங்கதியும் அறிந்தவர், எங்கும் இருப்பவர் என்பது கருத்து. ஆனால் அவர் இருப்பதாக உம்மை நம்பும்படி செய்ய அவரால் முடியவில்லை. உம் புத்திக்கு அவர் இருக்கும்படி அறியச் செய்ய முடியவில்லை, நீர் பார்க்கிற எந்த இடத்திலும் அவர் இல்லை, காணக்கிடைப்பதில்லை. உமக்கு மாத்திரமல்ல யார் கண்ணுக்கும் அவர் தென்படுவதில்லை, தென்பட்டதாக அடையாளத்தோடு எவரும் சொல்லவும் இல்லை இப்படிப்பட்ட ஒன்று இருக்கிறதா இல்லையா என்று நீர் என்னைக் கேட்பதானால் "அன்றைக்கு உங்கள் வீட்டில் ஒருவர் செத்துப்போனதாகச் சொன்னார்களே அது நீயா உன் தம்பியா" என்று கேட்கும் உம் நண்பருக்கும் உமக்கும் என்ன வித்தியாசம்? சர்வ சக்தி, சர்வ ஞானம், சர்வ வியாபகம் என்றெல்லாம் சொல்லப்படும் பொருள் ஒரு சாதாரண மனிதனாகிய நீர் உணர முடியாமலும் உமது கண்ணுக்குத் தென்படாமலும் இருப்பது என்றால் இதில் சந்தேகம் கொள்ளுவதற்கு என்ன இருக்கிறது?

நீர் உமது நண்பனை "நான் உன்னிடம் நேரில் பேசிக்கொண்டு இருக்கிறேனே என்னைப்பார்த்து நீயா செத்துப்போனது என்று கேட்கிறாயே" என்று சொன்னாயல்லவா? அதுபோல் உமது எதிரில் எங்கும் காணாமலும் அல்லது நீர் சந்து பொந்தெல்லாம் தேடியும் உமது கண்ணுக்குத் தென்படாமலும், உம்மனதுக்குக்கூட விளங்காமலும் விளங்கச் செய்யாமலும் இருக்கும்போது சர்வ சக்தி, சர்வ வியாபகமானதான வஸ்து ஒன்று—அதாவது கடவுள் என்னும் பேரால் இருக்கிறதா என்று கேட்பதற்கு எதை ஒப்பிடுவது?

இன்னும் விளக்கம் வேண்டுமானால் சொல்லுகிறேன் கேள். எதிரில் காணும் ஒரு மனிதனை, தாம் நேருக்கு நேராகப் பேசிக்கொண்டிருக்கும் ஒரு மனிதனை "அன்றையதினம் செத்துப்போனது நீயா" என்று கேட்பது முட்டாள்தனமானால், எதிரில் (மாத்திரமல்லாமல் எங்குமே) இல்லாமலும், பேசுவது (மாத்திரமல்லாமல் எவ்வித சக்தி உணர்த்துவதும்) இல்லாமலும், தேடியும் முயற்சித்தும் எந்த இந்திரியங்களுக்கும் தட்டுப்படாமலும் இருக்கின்றதை அறிந்துகொண்டு ஒரு வஸ்து இருக்கிறதா என்று சந்தேகப்படாமல் அது முட்டாள்தனமோ அல்லது அயோக்கியத்தனமோ அல்லவா என்பதை நீரே சிந்தித்துப்பாரும்.

அன்றியும் சர்வ வல்லமையும், சர்வ வியாபகமும் உள்ள வஸ்து ஒன்று இருப்பதானால், அது, தான் இருப்பதை உம்மை அறியும்படிச் செய்யவும் உமது கண்ணுக்குத் தென்படும்படியாய் இருப்பதற்கும் ஏன் அதற்கு முடியவில்லை? உமக்கு அறியமுடியாமலும், உமது கண்ணுக்குத் தெரியமுடியாமலும் ஒன்று இருக்கிறது என்றால் அப்போது அதற்கு சர்வ சக்தி, சர்வ வியாபகம் உள்ள ஒரு வஸ்து அல்லது ஒரு கடவுள் என்கின்ற தன்மை பொருந்துமா? அப்படி பொருந்துவதானால் அது தர்க்க வாதத்துக்கு ஏற்றதாகுமா?

ஏதோ ஒரு பற்றுதல், ஏதோ ஒரு குருட்டுநம்பிக்கை, அல்லது ஒரு மூ—(மூர்க்க) பிடிவாதம், பழக்கத்தில் ஏற்பட்ட மருட்சி என்பதல்லாமல் மற்றபடி ஒரு வஸ்து நிச்சயத்திற்கு தர்க்க முறைப்படி, பகுத்தறிவு ஆராய்ச்சித் தன்மைப்படி இந்திரியங்களுக்கும் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் எட்டாத வஸ்து ஒன்று உண்டு என்பதாக ஒப்புக்கொள்ளுவது விசாரித்தறிந்ததாக ஆகுமா.

க-ப:—நான் கடவுள் இருக்கிறது என்று முடிவு கட்டிவிடவில்லை, அவ்வளவு முட்டாள் அல்ல நான், ஒரு சந்தேகம் அதுதான் உங்களைக் கேட்டேன். அதில் தப்பு என்ன அய்யா இருக்கிறது?

(தொடரும்)

---

ஒரு திராவிடன் (தமிழ்மகன்) பார்ப்பன மதத்தில் இருப்பதைவிட மகமதிய மதத்திலோ கிறிஸ்தவ மதத்திலோ இருப்பது கொஞ்சம்கூட தப்பாகாது.

ஈ. வெ. ரா.

[2ம் பக்கத்தொடர்ச்சி]

ஒரு சிறு அளவுக்கு ஆவது முன்பு இருந்த கஷ்டம், பயம், தொல்லை, அடக்குமுறை, வரிக்கொடுமை ஒழிந்ததாகவோ கூறுவதற்கு எதையாவது எடுத்துக்காட்ட முடிகிறதா? என்று சிந்தித்துப்பாருங்கள்.

வயிற்றுக்குச் சோறு போதவில்லை, இடுப்புக்குத் துணி பத்தவில்லை, இருக்க இடம் கிடைக்கவில்லை என்கின்ற குறையும் கஷ்டப்பாடும் தொல்லையும் வளர்ந்ததா? குறைந்ததா? இனிமேலாவது குறைய வழியாவது காணப்பட்டதா? படுகிறதா? இவை ஒருசமயம் ராமராஜ்யமான சுயராஜ்யத்தில் கடவுள் செயல் என்று சொல்லப்படலாம். ஆனால் சிறுபான்மையோர் பிற்படுத்தப்பட்டவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் அதாவது முஸ்லிம்கள், சூத்திரர்கள், பஞ்சமர்கள் என்ற தலைப்பில் குறிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு அதாவது இம்மாகாணத்தின் மொத்த ஜனத்தொகையில் 100க்கு 95 பேர்களாகவுள்ள மக்களுக்கு ஏதாவது மாறுதல், மேன்மை ஏற்பட்டதா? ஏற்பட்டு இல்லாவிட்டாலும் அன்னிய ஆட்சியில் இருந்துவந்த சௌகரியமாவது "சுயராஜ்யத்தில்" ஏற்பட்டதா? என்று சிந்தித்துப்பாருங்கள். இருந்ததும் ஒழிக்கப்பட்டு வருகிறதே! இது திராவிட தேசமக்களுக்குத் தெரியவில்லையா? என்று கேட்கிறேன்.

சுயராஜ்யம் வந்து விட்டதாகச் சொல்லப்பட்ட பிறகும் காங்கரஸ் ஏன் இருக்கிறது என்றால் பனியா, பார்ப்பனர் ஆட்சியை நிலைக்கவைக்கவேண்டும் என்கின்ற உள்கருத்துத்தான் என்று நாம் திராவிடக் கழகத்தார்களும் முஸ்லிம் தோழர்களும் உண்மையாகவே தெளிவாகக் கருதுகிறோம். ஆனதால் "சுயராஜ்யம் வந்து விட்டது, அதிகாரமாற்றம் ஏற்பட்டு விட்டது" என்று சொல்லப்படுவதை சூழ்ச்சி என்றும், நாம் நம்புவது என்பது அறியாமை என்றும் கருதி பனியா, பார்ப்பனீய ஆட்சியும், சுரண்டலும், கொடுமையும் அற்ற யோக்கியமான சுயராஜ்யம் வேண்டும் என்கிறோம். நாம் தேர்தலில் கலந்து கொள்வதும் இதற்கு ஆகத்தானே ஒழிய காங்கரஸ் தொண்டர்கள் போல் பதவி வேட்டைக்கோ, வாழ்க்கைக்கு வகை செய்து கொள்ளவோ அல்ல என்று உறுதியாய்க் கூறுகிறோம்.

இன்றைய பனியா, பார்ப்பனீய ஆட்சி ஒழிந்தால் ஒழிய, அழிக்கப்பட்டால் ஒழிய நம் திராவிடநாட்டுக்கு மாத்திரம் என்பது அல்லாமல், இந்துஸ்தான் என்கின்ற பரந்த இந்த இந்தியாக் கண்டத்திற்கே உய்வில்லை, ஓய்வில்லை, ஒற்றுமையான, சாந்தமான வாழ்வில்லை. இது உறுதி உறுதி உறுதியேயாகும்.

ஓநாய் ஆட்சியும் நரி ஆட்சியும் ஒழிந்தால் ஒழிய ஆட்டு மந்தைக்கு நல்வாழ்விருக்க முடியாதல்லவா? அதுபோல்தான் நம் நிலை இருக்கிறது. ஆகவே தேர்தலில் நமக்குள்ள கவலை, சம்மந்தம் ஆகியவைகளை நான் வெள்ளையாகவே சொல்லுகிறேன். யாரோ வெற்றி பெறட்டும், யாரோ பதவிக்கு வரட்டும் எனக்குக் கவலையில்லை. வரப்பிரியப்படுகிறவர்கள் திராவிடநாட்டு எல்லைக்குள் ஆவது பனியா, பார்ப்பனீய ஆட்சியை தலைகாட்டாமல் ஒழிக்கச் சம்மதிக்கிறார்களா? என்றுதான் நான் கேட்கின்றேன்.

## கம்யூனிஸ்ட் பிளேக்

இந்த இடையில் கம்யூனிஸ்ட்டுகள் என்கின்ற ஒரு கதர் கூட்டம் நம் முயற்சிக்கு இடையூறாக நின்றுகொண்டு நம்மை பிற்போக்குச் சக்தி என்றும், பணமூட்டைகளின் அடிமைகள் என்றும் நம்மை அழித்தாகவேண்டும், காங்கரசை பலம் குறைய விடக்கூடாதென்றும் நம் தொழிலாளி மக்களிடை பிரசாரம்செய்து நமக்குப் பலவிதத் தொல்லைகள் கொடுத்துவருகிறார்கள். பனியா, பார்ப்பனீயத் தொல்லையைவிட நம்நாட்டில் இந்தக் கம்யூனிஸ்டுகள் என்கின்ற ஒரு பிளேக் வெகு தொல்லையைக் கொடுக்கிறது. பனியா, பார்ப்பனீயத் தொல்லை நமக்கு வெளிப்படையாகத் தெரிகிறது. ஒரு அளவுக்கு ஆவது நாம் தெரிந்து ஜாக்கிரதை கொள்ள முடிகிறது. ஆனால் பனியா, பார்ப்பனீயத்தின் கிபங்கலை அற்ற, கொள்கையின் உணர்ச்சி அற்ற அடிமை ஸ்தாபனமாகிய இந்திய கம்யூனிஸ்டுகள் என்பவர்கள் தங்கள் உண்மை சொரூபத்தை மறைத்துக் கொண்டு ஏழை மக்களை ஏமாற்றிப் பனியா, பார்ப்பனீயத்துக்கு அடிமை ஆக்குகிறார்கள். பனியா, பார்ப்பனீயத்தின் அக்கிரமங்களை, சூழ்ச்சிகளைப் பாமர மக்கள் உணர முடியாதபடி கம்யூனிஸ்டுகள் திரை போட்டு மறைக்கிறார்கள், துரோகங்களில் இதற்கு மேற்பட்ட துரோகம் இருக்க முடியாது. நம் நாட்டுத் தொழிலாளர் நல்வாழ்வும் முன்னேற்றமும் நாசமாகித் தொழிலாளர்கள் கீழ் நிலைக்குப் போக, மிருகங்களைவிட கேவலமாய் மதிக்கப்பட, தொல்லைப்பட இந்த இந்திய கம்யூனிஸ்டுகள் என்று தங்களைச் சொல்லிக்கொள்ளும் பனியா, பார்ப்பனீய அடிமைகளே, ஒற்றர்களே காரணம்.

நம்நாட்டில் இந்த கம்யூனிஸ்டுகள் என்றுசொல்லிக்கொள்ளுபவர்களுக்கு எவ்வளவு மோசமான சாதாரண காரியத்திலும், எவ்விதமான சுதந்திரமும், சுயபுத்தியைப் பயன்படுத்தும் தன்மையும் கிடையாது. காங்கரசைப்போலவே வடநாட்டுப் பார்ப்பான் லகான் சுண்டினபடி நடக்கவும் திரும்பவும் வேண்டிய அடிமைத்தனத்துக்கு ஆளானவர்கள். அவர்களில் பலர் நம்மவர்களாய் இருந்தாலும், நம் எதிரிகள் என்னும் வடநாட்டுப் பனியா பார்ப்பன கோடாலிக்குப் பிடியாக இருப்பவர்களே ஆவார்கள். திராவிட இளைஞர்கள் தொழிலாளிகள் சற்று உஷாராய் இருந்து அதிலிருந்து விலகாவிட்டால் தங்களை வீணாகக் கெடுத்துக்கொண்டவர்கள் என்றாவதல்லாமல் தங்கள் இனத்தையும் வகுப்பையும், நாசப்படுத்தின துரோகக் காரியத்தில் ஈடுபட்ட இழிபெயருக்கு ஆளாவார்கள்.

இன்றைய கம்யூனிஸ்டுகள் பலரும் காங்கரசிலிருந்தும், சுயமரியாதை இயக்கத்திலிருந்தும் கழட்டப்பட்டு வந்தவர்களே ஆவார்கள். அவர்களுக்கு ஒரு கழகத்தின் மூலம் வாழ்வு நடத்தப்பட

வேண்டும், விளம்பரம் வேண்டும் என்பதல்லாமல் அடியோடு கொள்கை நாணயமற்றவர்கள். நாட்டில் ஒரு நல்ல முக்கியமான காரியத்தின் பெயரை உபயோகப்படுத்திக்கொண்டு அதற்குக் கேடு ஏற்படும் வழியில் முதலாளிப் பாம்புக்குத் தலையையும், தொழிலாளி மீனுக்கு வாலும் காட்டிக்கொண்டு மதவேஷக்காரர்கள் போலப் பிழைப்பவர்கள். காங்கரஸ் முதலாளிகள் ஸ்தாபனம் என்பதை எடுத்துச் சொல்லாத கம்யூனிஸ்டுகள், சமதர்மவாதிகள், முற்போக்கு கூட்டத்தார்கள் என்பவர்களில் ஒருவர்கூட கிடையாது. ஆனால் கம்யூனிஸ்ட்டுகள் காங்கரசின் அடிமையாவார்கள். சிறிதுகாலம் லீக்குக்கு வால்பிடித்தார்கள், சிறிதுகாலம் சர்க்காருக்கு வால்பிடித்தார்கள், காங்கரஸ்காரர்களால் அடி உதை பட்டவர்கள் போல் பொய் அழுகை அழுது தங்களைக் காங்கரசுக்கு எதிரிகளாகக்காட்டிக்கொண்டார்கள். அந்த லீக் முற்றுப்புள்ளி பெற்றது, சர்க்கார் திரைமறைவில் ஒளிந்தது. இப்போது கம்யூனிஸ்ட் காங்கரசின் முன்னோடும் பிள்ளையாக—கையாளாக விளங்குகிறது. "காங்கரஸ் எதிரிகள், கம்யூனிஸ்ட்டுகளுக்கும் எதிரி"களாம். "காங்கரஸ் வலுக்குறைந்தால் உலகம் முழுகிப்போகு"மாம். என்னே கம்யூனிச ஞானம்! ஏழை மக்களை வாட்டி வதைத்து சாறு பிழிந்து முதலாளிகளுக்கு டானிக்காக விற்கும் காங்கரசுக்குக் கம்யூனிஸ்ட்டுகள் தரகர்களாக இருந்து தொழிலாளி மக்களுக்குத் துரோகம் செய்கிறார்கள்.

தொழிலாளி விஷயத்திலாவது, பொருளாதாரத்திலாவது கம்யூனிஸ்டுகளின் கொள்கை என்ன? அவர்களது நடத்தை என்ன? பாமரத் தொழிலாளிகள் இவர்களால் நாசமாகப் போகிறார்கள். தொழிலாளி மக்களின் பகுத்தறிவு நாசமானதற்கு இந்தக்கம்யூனிஸ்டுகளே காரணம். கம்யூனிச மேலிடத்துத்தலைவர் பார்ப்பனர். காங்கரசின் மேலிடத்துத் தலைவர் பார்ப்பனர். இரு ஸ்தாபனத்தின் சட்டாம்பிள்ளைகள் பார்ப்பனர்கள். இவர் திராவிட மக்களில் முதலாளிகளையும், ஏழை மக்களையும் ஆளுக்கொன்றாகப் பங்குபோட்டு அடிமையாக ஆக்கிக்கொண்டு நாட்டின் முன்னேற்றத்தையும், மக்களின் நல்வாழ்வையும், சமாதானத்தையும் பாழாக்குகிறதும், கலகம், குழப்பமும், மக்கள் சீரழிவதுமே தங்கள் காரியத்தின் பயன் என்றால் இதை விஷநோய் என்றுதானே சொல்லவேண்டும்.

காங்கரசை ஆதரிப்பதைத்தவிர, காங்கரசுக்கு ஓட்டு சேகரித்துக் கொடுப்பதைவிட தொழிலாளிகளை, ஏழைகளை காங்கரசுக்குச் சேர்த்துவிடுவதைவிட வேறு ஒரு வேலையும் இல்லாத கம்யூனிசம்—வேறு எந்த விஞ்ஞானத்துக்கும் பொருளாதார முற்போக்குக்கும் பகுத்தறிவு ஞானத்துக்கும் எதிரிடையாய் இருக்கும் கம்யூனிசம், ஒரு நாட்டு மக்களை, ஒரு இன மக்களை, மற்றொரு நாட்டாருக்கு, மற்றொரு இனத்தாருக்கு அடிமைப்படுத்தும்—காட்டிக் கொடுக்கும் கம்யூனிசம் பெருந்த துரோக ஸ்தாபனம் என்றுதான் சொல்லப்படவேண்டும். சுமார் 10-வருட காலமாக இந்தமாதிரி நாசவேலை செய்துவரும் கம்யூனிசம் அரசியல், பொருளாதாரம், மதம் ஆகிய துறையில் தான் செய்த வேலை இன்னது, தன்னால் ஏற்பட்ட காரியம் அல்லது உணர்ச்சி இன்னது என்று ஒரு சிறு துரும்பளவு காட்ட முடியுமா? என்று பாருங்கள். தங்களை அழகுபடுத்திக் கொண்டு திரியும் தாங்கள் நாகரிகம்போல் கம்யூனிஸ்டுகள் வெறும் கூச்சலால் மக்களைத் திரும்பிப் பார்க்கச்செய்து மக்களை ஏய்ப்பதைத்தவிர வேறு காரியம் செய்கதாக ஏதாவது சொல்லமுடியுமா?

காங்கரசை இந்துமகாசபை ஆதரிக்கிறது; முதலாளிகள்—பிர்லா, பஜாஜ், டாட்டா, நாடிமுத்து, அளகாப்பா, பூண்டி, வடபாதிமங்கலம் முதலியன ஆதரிக்கின்றன, கம்யூனிஸ்டுகளும் ஆதரிக்கின்றனர். சங்கராச்சாரிகள், பண்டார சன்னதிகளும் ஆதரிக்கின்றனர். அமெரிக்கரும், ராமராஜ்ய மூடநம்பிக்கைப் பிரசார காந்தியாரும் ஆதரிக்கின்றனர். ஆகவே கம்யூனிஸ்டுகளும், காங்கரசை ஆதரிப்பதற்குத் தனியான காரணம் ரகசியமான காரியம் என்ன இருக்கமுடியும்?

"உன் சினேகிதனைச் சொல்லு உன்னுடைய யோக்கியதையைச் சொல்லிவிடுகிறேன்" என்பது போல் கம்யூனிஸ்டுகளின் சினேகிதர் யோக்கியதையைக்கொண்டே கம்யூனிஸ்ட்டுகளின் யோக்கியதையைச் சொல்லிவிடலாம்.

உண்மையைப் பேசவேண்டுமானால் திராவிட கழகம் ஒன்றுதான் இவ்வளவு ஸ்தாபனங்களையும், இவ்வளவு நபர்களின் தன்மைகளையும் எதிர்த்துவருகிறது. இவர்கள் வண்டவாளங்களையும், மற்றும் கடவுள் சொர்க்க நரக மகான் முதலிய வண்டவாளங்களையும் எதிர்த்து எதிரிகளாக்கிக் கொண்டு, பல கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு மக்களுக்குள் முக்காடில்லாமல் உலவி வருகிறது. பாமர மக்களுக்கு அறிவில்லாமல் அவர்கள் ஆதரிக்காததால் ஒரு உண்மை பொய்யாகிவிடுமா?

எனவே, திராவிட இளைஞர்களுக்கும், தொழிலாளிகளுக்கும் இந்திய கம்யூனிட் ஸ்தாபனம் என்பது ஒரு தொத்து விஷநோய். இதற்குப் பாதுகாப்பு திராவிடர் கழகம்தான் என்பேன். ஏனெனில் வடநாட்டுத் தொடர்பில்லாத கம்யூனிசமாக இருந்திருக்குமானால் அது எவ்வளவோ நாணயமாக இருந்திருக்கும், வடநாட்டுத் தொடர்பை ஒழிக்கப் பாடுபடுவது திராவிடர் கழகம் ஒன்றுதான் என்பதை உணருங்கள். இதை சிந்தித்து முடிவுக்கு வாருங்கள்.


## விளம்பர விகிதம்

கோர்ட்டு, முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டு முதலானவைகளுக்கு அங்குலம் 1க்கு ரூ 4-0-0

வியாபார விளம்பரத்துக்கு அங்குலம் 1க்கு ரூ. 2-0-0

நீடித்த விளம்பரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

மானேஜர்,
"குடி அரசு" ஈரோடு.


Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE.